**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 29/2024**

**09.04.2026.**

**PW- 1**

**வா.சா.1.பொன்னுசாமி, த/பெ.பிச்சை அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:

இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் - வழக்கு சொத்து எனக்கு சொந்தமானது என்றும் என்னுடைய இடத்திற்கு போலி ஆவணம் ஏற்படுத்தியுள்ளதால் அந்த ஆவணத்தை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த சொத்து விவரத்தினை பொறுத்து அவ்வாறு பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் - சர்வே எண். 383/3 ல் 33.1/3 செண்ட்டிற்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் - ராஜேந்திரன் என்பவர் எனக்கு கிரய ஒப்பந்தம் செய்து பதிவு செய்துக் கொடுக்காமல் வெளிநாடு சென்றுவிட்டார். அதன்பின்பு நான் வாதியின் மீது வழக்கு தாக்கல் செய்து திருவாரூர், சார்பு நீதிமன்றம் மூலமாக கிரய பத்திரம் எனது பெயருக்கு பதிவு செய்யப்பட்டது. ராஜேந்திரன் எனக்கு கிரய ஒப்பந்தம் செய்துக்கொடுக்கும்போது சொத்து யாருக்கு சொந்தம் என்பதை பார்த்தேனா என்றால் - ராஜேந்திரனின் மூத்த சகோதரர் பக்கிரிசாமி பெயரில் சொத்து இருந்தது. பக்கிரிசாமி பெயரில் சொத்து இருக்கும்போது எவ்வாறு ராஜேந்திரனிடம் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் - ராஜேந்திரன், பக்கிரிசாமி, செல்வேந்திரன் மூவருக்கும் அந்த சொத்தில் ஒரு பாகம் இருந்தது. மூவரும் சொத்தை பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை மூலம் பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்களா என்றால் - இல்லை. கிராம வழக்கப்படி வெண்ணிலை பத்திரமாக ஏற்படுத்திக்கொண்டார்கள். வெண்ணிலை பாகப்பத்திரத்தில் ராஜேந்திரனுக்கு பாகம் இருந்தது என்பதற்கும் அதனடிப்படையில் வருவாய் துறை கணக்கினை பார்த்தேனா என்றால் - பார்க்கவில்லை. புல எண். 383/3 பரவாக்கோட்டை 1 கிராமத்தில் உள்ளது. ராஜேந்திரன் பேரில் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் இல்லை என்பதையும் கூட்டு பட்டாவில் அவர் பெயர் இல்லை என்பதையும் நான் தெரிந்துக்கொண்டேன் என்றால் - பார்க்கவில்லை. அனுபவத்தின் அடிப்படையிலும் வெண்ணிலை பத்திரத்தை பார்த்ததன் அடிப்படையிலும் ஒப்பந்தம் போட்டுக்கொண்டேன். புல எண்.383/3 யார் பெயரில் உள்ளது என்பதை தெரிந்துக்கொண்டேனா என்றால் - தெரிந்துக்கொண்டேன். அது பக்கிரிசாமி பெயரில் இருந்தது.புல எண்.383/3 சொத்தினனை பக்கிரிசாமி கிரயபத்திரம் மூலம் கிரயம் வாங்கியதையும் அவர் பெயரில் அந்த சொத்தை பொறுத்து தனிப்பட்டா இருந்ததையும் தெரிந்துக்கொண்டேன் என்றால் - சரிதான். நான் ஏற்கனவே தாக்கல் செய்த ஏற்றுகை ஆற்றுதல் பரிகார வழக்கில் இந்த வழக்கு சொத்து பக்கிரிசாமி பெயரில் உள்ளது என்பதையும் அவர் பெயரில் பட்டா இருப்பதையும் தெரிந்துக்கொண்டு பக்கிரிசாமியையும் அந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தேனா என்றால் - இல்லை. சொத்திற்கு உண்மையான உரிமையாளர் பக்கிரிசாமி என்றாலும் அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் ராஜேந்திரன் வெளிநாட்டில் இருப்பதை நன்கு தெரிந்துக்கொண்டும் அவர் மீது வழக்கு தொடுத்தேன் என்றால் - சரியல்ல. ராஜேந்திரன் ஊருக்கு வந்தபிறகு தான் வழக்கு போட்டேன்.

நான் தாக்கல் செய்த வழக்கில் ராஜேந்திரன் சொத்தின் உரிமையாளர் இல்லை என்பதாலும் அவர் வெளிநாட்டில் இருந்ததாலும் ஒருதலை பட்ச தீர்ப்பாணையை வைத்து கிரய பத்திரம் எனது பெயரில் பதிவு செய்திருந்தேன் என்றால் - சரியல்ல. நான் மோசடியாக ஒரு ஆவணத்தை தயார் செய்து சொத்திற்கு உரிமையாளர் ராஜேந்திரன் கிடையாது என்பதை தெரிந்துக்கொண்டு அவர் ஊரில் இல்லாத நேரத்தில் ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பாணை பெற்றுள்ளேன் என்றால் - சரியல்ல. ஒரு ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சொத்து ஒருவருக்குசொந்தமானதா என்பதை உறுதிக்செய்துக்கொண்ட பிறகுதான் கிரய ஒப்பந்தம் போடவேண்டும் என்றாலும் ஆனால் ராஜேந்திரனுக்கு சொத்து உரிமையில்லை என்பதை நான் நன்கு தெரிந்துக்கொண்டும் ஒரு மோசடியான கிரய ஒப்பந்தத்தை தயார் செய்து நீதிமன்றத்தில் மோசடியாக தீர்ப்பாணை பெற்றுள்ளேன் என்றால் - சரியல்ல. ராஜேந்திரன், பக்கிரிசாமி, செல்வேந்திரன் ஆகியோர்களுக்கிடையே நான் சொன்னதுபோல எந்தவொரு வெண்ணிலை பாகப்பிரிவினையும் ஏற்பட்டது கிடையாது என்றால் - சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்காக மோசடியாக ஒரு வெண்ணிலை பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் - சரியல்ல. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - 33.1/3 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் - 70 செண்ட் ஆகும். வழக்குரையில் தாவா சொத்து விவரத்தில் 70 செண்ட்டை காண்பித்துள்ளேன் என்றால் - நான் கிரயம் வாங்கிய பத்திரத்தில் உள்ள அளவான 33.1/3 செண்ட் மட்டும் காண்பித்துள்ளேன். அசல் வழக்கு எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் - முதலில் மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதன்பின்னர் திருவாரூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. அதன் அசல் வழக்கு எண்.160/1999 ஆகும். அசல் வழக்கு எண்.160/1999 வழக்கிலும் பிரதிவாதி ஆஜராகாத காரணத்தினால் தீர்ப்பாணை வழங்கப்பட்டது என்றால் - சரிதான். பக்கிரிசாமியும் ராஜேந்திரனும் அந்த இடத்தில் வசிக்கவில்லை என்பதை நன்கு தெரிந்துக் கொண்டே அங்கு இருப்பதாக காட்டி பொய்யான தீர்ப்பாணையை பெற்றுள்ளேன் என்றால் - சரியல்ல. ராஜேந்திரன் தான் இந்த சொத்தில் அனுபவத்தில் இருந்தார். ராஜேந்திரன் சொத்தில் அனுபவத்தில் இருந்தார் என்பதற்கு வருவாய் துறை ஆவணங்களை பார்வையிட்டு தாக்கல் செய்தேனா என்றால் - இல்லை. அசல் வழக்கு எண்.160/1999 ல் நான் தாக்கல் செய்த நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர் ராஜேந்திரனுக்கு அழைப்பாணை அனுப்பப்படவில்லை என்றால் - சரியல்ல. ராஜேந்திரன் ஆஜராகாமல் அழைப்பாணை வாங்க மறுத்ததால் ஒருதலைபட்ச உத்தரவு வழங்கப்பட்டது. நீதிமன்றம் செய்துக்கொடுத்த கிரய சாசனத்திலும் எனக்கு அனுபவம் ஒப்படைக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் - சரிதான். சொத்தை வசப்படுத்த அதன்பிறகு தான் நிறைவேற்று மனு தாக்கல் செய்து சொத்தினை வசப்படுத்தினேன். **(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன், சார்பு நீதிபதி.